# கொடுப்பதும்! பெறுவதும்!



ப்ரக்ருன்

# கொடுப்பதும்! பெறுவதும்!

ப்ரக்ஞன்

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | கொடுப்பதும்! பெறுவதும்! |
| **ஆசிரியர்** | : | ப்ரக்ஞுன் |
| **வெளியீடு** | : | பராபரம் |
| **வகை** | : | விழிப்புணர்வு |
| **முதற்பதிப்பு** | : | 2018 |
| **பக்கங்கள்** | : | 15 |
| **அளவு** | : | **A5** |
| **விலை** | : | அக விழிப்பு |

# கொடுப்பதும்! பெறுவதும்!

## (தன்னை அறிதல்!)

ஒருமுறை, ஒரு பிச்சைக்காரன் ரயிலில் பிச்சை எடுக்கும்போது, நேர்த்தியாக நன்கு உடையணிந்த ஒரு பணக்கார தொழிலதிபர் சூட் மற்றும் பூட்ஸ் அணிந்திருப் பதைக் கவனித்தார்.

இந்த மனிதன் மிகவும் பணக்காரனாக இருக்க வேண்டும் என்று அந்த பிச்சைக்காரன் நினைத்தார். எனவே, நான் அவரிடம் பிச்சை கேட்டால், அவர் நிச்சயமாக நிறைய பணம் கொடுப்பார் எனக்கருதி., அவன் சென்று அந்த பணக்கார மனிதரிடம் பிச்சை கேட்டான்.

அந்த பணக்கார நபர் பிச்சைக்காரனைப் பார்த்து, *"நீங்கள் எப்போதும் பிச்சையெடுத்து மக்களிடம் எதையாவது கேட்டுக் கொண்டேதான் இருக்கிறீர்கள்!. நீங்கள் யாருக்காவது, எதையாவது கொடுப்பீர்களா?"* என்று கேட்டார்.

அதற்கு, அந்த பிச்சைக்காரன், *"ஐயா, நான் ஒரு ஏழை, மேலும் பிச்சைக்காரன், என்னால் மக்களிடம் பணம் கேட்க மட்டும்தான் முடியும். நான் எப்படி மற்றவர்களுக்கு எதையாவது கொடுக்க முடியும்?"* என்று திரும்ப அவருக்கு பதிலளித்தான்.

அதற்கு அந்த பணக்காரர் மேலும், பின்வருமாறு பதிலளித்தார், *"நீங்கள் யாருக்கும் எதையும் கொடுக்க முடியாதபோது, எதையும் கேட்பதற்கு உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை. நான் ஒரு தொழிலதிபர், ஆகவே, நான் பரிவர்த்தனைகளை மட்டுமே நம்புகிறேன், ஆகவே, உங்களிடம் எனக்கு ஏதாவது கொடுக்க முடிந்தால், என்னால் பதிலுக்கு ஏதாவது கொடுக்க முடியும்!"* என்பதாகக் கூறி அவனை விட்டு விலகிப் போனார்.

அத்துடன் அந்த ரயில் அவர் இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டதால், அந்த தொழிலதிபர் கீழே இறங்கிச் சென்று விட்டார். அந்த பணக்கார மனிதர் என்ன சொன்னார்? என்பதை அந்த பிச்சைக்காரன் சற்றே யோசிக்க ஆரம்பித்தான். அவருடைய அந்த வார்த்தைகள் எப்படியோ? அந்த பிச்சைக்காரனின் இதயத்தை சென்றடைந்தன.

நான் யாரிடமும் எதையும் கொடுக்க முடியாது என்பதால், ஒருவேளை எனக்கு பிச்சையில் அதிக பணம் கிடைக்காது போலும் என்பதாக, அவன் அதைப்பற்றி யோசிக்க ஆரம்பித்தான். ஆனால் நானோ ஒரு பிச்சைக்காரன், நான் யாருக்கும், எதையும் கொடுக்கத் தகுதியற்றவன். ஆனால், நான் எவ்வளவு நாட்கள் இவ்வாறு, எதையும் மற்றவர்களுக்கும் கொடுக்காமல் இந்த மக்களிடம் கேட்டுக்கொண்டே இருப்பேன்? இதையும் அவன் யோசித்தான்.

ஆழ்ந்து யோசித்த பிறகு, அந்த பிச்சைக்காரன் பிச்சை எடுக்கும் போதெல்லாம், தனக்கு பிச்சைப் போட்ட நபருக்கு நிச்சயமாக ஏதாவது ஒன்றை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்தான்.

ஆனால், இப்போது கேள்வி என்னவென்றால், பிச்சை எடுக்கும்போது, அவன் மற்றவர்களுக்கு என்ன கொடுத்துவிட முடியும்?

நாள் முழுவதும் இதைப்பற்றி யோசித்துக் கொண்டே இருந்தான். ஆனால், அவனின் கேள்விக்கு எந்த பதிலும் கிடைக்கவில்லை.

அடுத்த நாள் அவன் அதே ரயில்வே ஸ்டேஷன் அருகே அமர்ந்திருந்தபோது, அவனுடைய கண்கள் ஸ்டேஷனைச் சுற்றியுள்ள செடிகளில் பூத்துக் குலுங்கும் சில பூக்கள் மீது விழுந்தன. பிச்சைக்காக மக்களுக்கு ஏன்? சில பூக்களை கொடுக்கக்கூடாது என்று அவன் நினைத்தான்.

அவனுக்கு அந்த யோசனை பிடித்திருந்தது. மற்றும் அங்கிருந்து சில பூக்களைப் பறித்துக்கொண்டு ரயிலில் பிச்சை எடுக்கச் சென்றான்.

எப்போதாவது, யாராவது அவனுக்கு உணவு அளித்தாலும், அதற்குப் பதிலாக அவன் சில பூக்களை அவர்களுக்கு கொடுப்பான். மக்களும் அந்த பூக்களை மகிழ்ச்சியுடன் வாங்கி வைத்துக் கொண்டனர்.

இப்போது பிச்சைக்காரன் தினமும் பூக்களைப் பறித்து, அந்தப்பூக்களை மக்களுக்குப் பகிர்ந்தளித்தான்.

சில நாட்களில் அவனுக்கு நிறையப் பேர் தானம் கொடுக்க ஆரம்பித்தனர். அதனால், அவனுக்கு அதிக பணம் வருவதையும் அவன் உணர்ந்தான்.

ஆகவே, அவன் மேன்மேலும், ஸ்டேஷனுக்கு அருகில் உள்ள அனைத்து பூக்களையும் பறித்துக் கொண்டு வந்தான்.

அவனிடம் பூக்கள் இருந்தவரை, அதை அவன் மற்றவர்களுக்கு கொடுத்து வந்தவரை, பலரும் அவனுக்கு உணவு அளித்தனர். பணம் கொடுத்தனர். ஆனால், அவனிடம் உள்ள பூக்கள் அனைத்தும் தீர்ந்து போய் விட்டால், பூக்கள் எஞ்சியிருக்கவில்லை என்றால், அதன்பிறகு, அவனுக்கு அதிகமாகப் பிச்சை கிடைக்காது. இது ஒவ்வொரு நாளும் தொடர்ந்தது.

ஒரு நாள் அவன் பிச்சை எடுத்தபோது, அதே பணக்கார தொழிலதிபர் அந்த ரயிலில் வருவதைக் கண்டான், அவன் உடனடியாக அந்த தொழிலதிபருக்கு மலர்களை விநியோகிக்கத் தீர்மானித்தான்.

அதனால், பிச்சைக்காரன் உடனடியாக அவரை அணுகி, *"இன்று உங்களிடம் பிச்சைக்கு ஈடாக, சில பூக்களைக் கொடுக்கிறேன்"* என்றான்.

அதற்கு பதிலாக, அந்த பணக்கார மனிதரும் அவனிடம் கொஞ்சம் பணம் கொடுத்தார்.

பிச்சைக்காரன் அவரிடம் அதற்குப் பதிலாக சில பூக்களைக் கொடுத்தான். தொழிலதிபர் அவனுடைய இந்த யோசனையை வரவேற்றார். அவர் அதை மிகவும் விரும்பினார்

உடனே அவனைப் பார்த்து, அவர், *"ஆஹா! இன்று நீங்களும் என்னைப்போல ஒரு தொழிலதிபர் ஆகி விட்டீர்கள்"* என்றார்.

பிச்சைக்காரனிடமிருந்து பூக்களை எடுத்துக் கொண்டவர், தான் இறங்க வேண்டிய இடம் வந்ததும், அடுத்த ஸ்டேஷனில் இறங்கினார்.

மீண்டும் அவரது அத்தகைய வார்த்தைகள் பிச்சைக்காரனின் இதயத்தில் ஆழமாகப் பதிந்தது. அந்த மனிதர் சொன்னதைப் பற்றி அவன் மீண்டும், மீண்டும் சிந்தித்து, தன்னை ஒரு மிகப் பெரிய தொழிலதிபராக பாவித்து மகிழ்ச்சியாக இருக்கத் தொடங்கினான்.

அவனது கண்கள் இப்போது பிரகாசிக்கத் தொடங்கின. அவன் இப்போது தனது வாழ்க்கையை மாற்றக்கூடிய வெற்றிக்கான **திறவுகோல்** கிடைத்தது கண்டு, மிகுந்த மகிழ்ச்சியை உணர்ந்தான்.

அவன் உடனடியாக அந்த ரயிலில் இருந்து கீழே இறங்கி உற்சாகமாக வானத்தைப் பார்த்து மிகவும் உரத்த குரலில், *"நான் இனி ஒரு பிச்சைக்காரன் இல்லை! நான் இப்போது ஒரு மிகப்பெரிய தொழிலதிபர், நானும் அந்த பணக்கார மனிதரைப் போல ஆவேன். நானும் பணக்காரனாக முடியும்."* என சத்தமாகப் பேசினான்.

மக்கள் அவனைப் பார்த்தபோது, இந்த பிச்சைக் காரனுக்கு பைத்தியம் பிடித்துவிட்டது என்றுதான் நினைத்தார்கள். அதற்கு அடுத்த நாளிலிருந்து, அந்த பிச்சைக்காரன் மீண்டும் ரயில் நிலையத்தில் தோன்ற வில்லை. எந்த ரயிலிலும் அவன் பிச்சை எடுக்கவில்லை.

நான்கு வருடங்கள் கழித்து, ஒருநாள் அதே ரயில் நிலையத்தில் நல்ல கோட், சூட் அணிந்த இரண்டு பணக்கார ஆண்கள் அந்த ஸ்டேஷனில் இருந்து பயணம் செய்ய வந்தனர். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டபோது, அவர்களில் ஒருவன் மட்டும் கைகளைக் கூப்பி மற்றொருவரை வணங்கி, *"நீங்கள் என்னை அடையாளம் கண்டு கொள்கிறீர்களா?"* என்று கேட்டான்.

மற்றவரோ, *"இல்லை! நாம் இருவரும் இப்போது மட்டும்தான் முதல் முறையாக சந்திக்கிறோம்"* என்று பதிலளித்தார்.

முதலாவது நபர் மீண்டும் கூறினார், *"ஐயா, என்னை நினைவில் வைக்க முயற்சி செய்யுங்கள், நாம் இருவரும் முதல் முறையாக சந்திக்கவில்லை, இது மூன்றாவது முறையாக"* என்றார்.

இரண்டாவது நபர், *"அப்படியா! எனக்கு சரியாக ஞாபகம் இல்லை, நாம் இருவரும் இதற்கு முன்பு எப்போது சந்தித்தோம்?"* என்று கேட்டார்.

இப்போது, அந்த முதல் நபர் சிரித்துக்கொண்டே கூறினார், "நாம் இருவரும் இதற்கு முன்பு ஒரே ரயிலில் இரண்டு முறை சந்தித்தோம்.

நான் வாழ்க்கையில் என்ன செய்ய வேண்டும் என்று, முதல் சந்திப்பில் உண்டான நம் இருவரின் அறிமுகத்தில், தாங்கள் சொன்ன அந்த வார்த்தையை என்னால் மறக்க முடியவில்லை.

*"நீங்கள் எப்போதும் மக்களிடம் எதையாவது கேட்டுக் கொண்டேதான் இருக்கிறீர்கள்!. நீங்கள் யாருக்காவது, எதையாவது கொடுப்பீர்களா?"* என்பதை யோசித்துப் பார்த்து, தங்களை இரண்டாவது முறை சந்திக்கும்போது, தங்களிடம் பூக்களைக் கொடுத்து, பணத்தை வாங்கினேன். அந்த இரண்டாவது சந்திப்பில் நான் யார்? என்பதை எனக்கு சொன்னீர்கள்.

அதன் விளைவாக, "*நான் ஒரு தொழிலதிபர் என என்னை நான் பாவிக்க ஆரம்பித்தேன். அதன் விளைவாக, இன்று நான் ஒரு மிகப்பெரிய பூ வியாபாரி, அதே 'பூ' வியாபாரமாகத்தான் வேறொரு நகரத்திற்குப் போகிறேன்."* என்றார்

முதல் சந்திப்பில், அந்த இயற்கையின் சட்டத்தை நீங்கள் என்னிடம் சொன்னீர்கள். அதன்படி நாம் எதையாவது கொடுக்கும் போதுதான் நமக்கு ஏதாவது கிடைக்கும் என்ற இரகசியத்தை அறிந்துக்கொண்டேன்.

இந்த கொடுக்கல், வாங்கல் பரிவர்த்தனை விதி உண்மையில் நன்றாகவே வேலை செய்கிறது. நான் அதை நன்றாக உணர்ந்தேன்.

அதற்கு முன்பு, நான் எப்போதும் என்னை பிச்சைக்காரனாகவே நினைத்தேன். அதற்கு மேல் நன்றாக உயர வேண்டும் என்று நான் ஒரு நாளும் நினைத்துக்கூட பார்த்ததில்லை.

தங்களது வார்த்தைகள் என்னை ஆழமாக யோசிக்க வைத்தது. அதன்பிறகு, நான் உங்களை இரண்டாவது முறையாக சந்தித்தபோது, என்னுள் உண்டான புரிதல், என்னை எனக்குக் காட்டிக் கொடுத்தது. '**நான் ஒரு தொழிலதிபர் ஆகிவிட்டேன்**'.

உங்களது வார்த்தைகள் என்னை உயர்த்தி விட்டது. உங்களுக்கு நன்றி. அந்த நாளிலிருந்து, என் கண்ணோட்டம் மாறியது, இப்போது நான் ஒரு தொழிலதிபராகி விட்டேன், நான் இனி பிச்சைக்காரன் அல்ல. என்று கூறினார்.

அதைக்கண்டு, மற்றொருவரான அந்த தொழில் அதிபர் ஆச்சரியம் அடைந்தவராக, அவனை கட்டித் தழுவிக்கொண்டார்.

## இந்த கதையின் உட்கருத்து:–

இந்த கதையிலிருந்து ஒரு உண்மையை நாம் நன்றாகப் புரிந்துக் கொள்ள முடியும். அதாவது, இந்த இயற்கையின் பிரபஞ்ச நியதிப்படி, "**ஒன்றை கொடுத்து, ஒன்றைப் பெறுவதுதான்**" இங்கு இயக்கத்தில் உள்ளது. மேலும், தன்னைப் பற்றி ஒருவன் அறியாததால்தான் அவனுக்கு துயரம் வருகின்றது.

ஒருவன் தன்னை ஆன்மீக ரீதியாக அறிய முற்பட்டாலும், அல்லது இந்த உலகியல் ரீதியாக அறிய முற்பட்டாலும், அவனது மனதில் உள்ள அறியாமைகள் அகலும்போது மட்டுமே, அவனுக்கு தன் உண்மை இயல்பு (சொரூபம்) வெளிப்படும்.

அதுவரை, உலகியல் ரீதியில் ஒருவன் தன்னை தாழ்த்திக் கொண்டு, **ஏழை, இயலாதவன்** என்று கூறுவதுப் போல, ஆன்மீக ரீதியில் ஒருவன் தன்னை **சீவன்** என்று கூறிக்கொண்டிருக்கின்றான்.

இயற்கை அன்னையின் நியதிப்படி, இந்த உலகத்தில் உள்ள உயிர்கள் நலமுடன் வாழ, அது பஞ்சபூத ஆற்றல்களாக, **நிலம், நீர், நெருப்பு, காற்று** மற்றும் **ஆகாயம்** என எல்லாவற்றையும், எந்தவித எதிர்ப்

பார்ப்பும் இல்லாமல், எல்லோருக்கும் பொதுவாகத்தான் கொடுக்கின்றது.

அதுப்போல, நாமும், அந்த இயற்கை அன்னைக்கு நம்மால் இயன்ற பிரதி உபகாரம் அல்லது கைமாறு என ஏதாவது செய்யத்தான் வேண்டும்.

ஆனால், நாம் அவ்வாறு இயற்கைக்கு திரும்ப செய்கிறோமா? அல்லது இயற்கையை சீர்குலைக் கின்றோமா? என்பதை நாமேதான் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

உதாரணமாக, இந்த மனிதர்கள் சுவாசிக்கத் தேவையான பிராண வாயுவை காற்றாகவும், குடிக்கத் தேவையான நீரை மழையாகவும், உண்ணத் தேவையான உணவை பூமியில், மண்ணில் பயிர்கள் மூலமாகவும், அவைகள் வளர்வதற்கான வெப்பத்தை சூரியன் வாயிலாகவும், இவைகள் எல்லாம் இங்கு நிலையாக நிற்க ஆகாயத்தில் இடமும் அளித்துள்ளது.

மனிதனுக்குத் தேவையான சுவாசக் காற்றான பிராணவாயுவை மரங்கள் நமக்குத் தருகின்றன. நாம் வெளிவிடும் கரியமில வாயுவை மரங்கள் ஏற்றுக்

கொள்கின்றன. அதுப்போலவே, ஒரு விதையை இந்த பூமியில் விதைத்து, அதனை பாராமரிக்கும் பொழுது, அதன் பலனாக பல்லாயிரக்கணக்கான விதைகள் நமக்கு மீண்டும் திரும்பக் கிடைக்கிறது. இதுவே இயற்கையின் பிரபஞ்சநியதி.

அதாவது, **ஒன்றை நாம் கொடுத்தால், பிரபஞ்சம் பலமடங்கு நமக்கு திருப்பிக் கொடுப்பதை நம்மால் காண முடிகிறது.**

எனவே, எப்பொழுதும், எல்லோருக்கும் நம்மால் இயன்றதை கொடுத்து உதவுவோம்! அதனால், நாம் ஒன்றும் குறைந்துவிட மாட்டோம். இன்னும் நமக்கு அதிகம் கொடுக்கக் கூடிய ஆற்றல்கள்தான் அதிகம் உண்டாகும்.

அதாவது, ஒரு மடங்கு நாம் கொடுக்கும் பொழுது, அது பலமடங்கு நமக்குத் திரும்பக் கிடைக்கிறது. இதுவே, இயற்கையின் நியதி.

**ஓம் தத் சத்!**

# கொடுப்பதும்! பெறுவதும்!



பிரக்ஞன்